# அகண்ட தமிழ் உலகம்

# திருக்குறள் மாநாடு

## மட்டக்களப்பு, இலங்கை – 2026



**“உலகளாவிய அறப்பாதைக்கு வள்ளுவம் காட்டும் வாழ்வியல்”**

## கட்டுரைப்போட்டி

அகண்ட தமிழ் உலகம் எனும் அமைப்பானது, உலகம் முழுவதும் வாழும் தமிழர்களை ஒரே பண்பாட்டுத்தளத்தில் இணைக்கும் நோக்குடன், உலகளாவிய ரீதியில் 47க்கு மேற்பட்ட நாடுகளில் பல்வேறு சேவைகளை ஆற்றி வருகின்றது. இது தமிழர் பண்பாட்டையும் விழுமியத்தினையும் பாதுகாத்து வளர்ப்பதோடு, உலகில் வாழும் தமிழரிடையே ஒற்றுமையினையும் ஒத்துழைப்பினையும் முன்னேற்றத்தினையும் வலுப்படுத்தி முன்கொண்டுசெல்வதில் முனைப்புடன் செயற்பட்டுவருகின்றது.

அறத்தினை முதன்மையாகக்கொண்ட, தெய்வப்புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறள், உலகம் தழுவிய நிலையில் இந்திய மொழிகளில் மட்டுமல்லாமல், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், சீனம், ரஷியன் முதலிய 60க்கு மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அதன்பொருண்மை மக்கள் மத்தியில் கொண்டுசெல்லப்படுகின்றது. இத்தகைய பெருமைபெறும் தெய்வப் புலவர் திருவள்ளுவர் அருளிய திருக்குறளினைப் போற்றும் திருக்குறள் மாநாடு, உலகளாவிய “அறப்பாதைக்கு வள்ளுவம் காட்டும் வாழ்வியல்” என்னும் கருப்பொருளினைக் கொண்டு இலங்கையில் மட்டக்களப்பு மண்ணிலே சிறப்பாக இடம்பெற உள்ளதோடு, பாடசாலை மாணவ சமூகம் பயன்பெறக் **கட்டுரைப்போட்டி** ஒன்றும் நடைபெற உள்ளது. இந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி, கட்டுரைப்போட்டியில் பங்குகொண்டு, எமது வாழ்வியல் நெறியினை வளமூட்டும் வள்ளுவத்தின் பொருண்மையினையும் உணர்ந்து செயற்படுவோம்.

### போட்டிப்பிரிவுகள் மற்றும் தலைப்புக்கள்

- **தரம் 6 மற்றும் 7 : 150 சொற்கள்**
  1. திருக்குறளில் கல்வி
  2. திருக்குறளும் அறமும்
  3. திருக்குறளில் இறைவழிபாடு
- **தரம் 8 மற்றும் 9 : 200 சொற்கள்**
  1. திருக்குறளில் அரசாட்சி
  2. திருக்குறளும் வைதீக நடைமுறைகளும்
  3. திருக்குறளில் நாவன்மை
- **தரம் 10 மற்றும் 11 : 250 சொற்கள்**
  1. திருக்குறளும் முகாமைத்துவமும்
  2. திருக்குறளும் கீதையும்
  3. திருக்குறளும் புருஷார்த்தங்களும்

### எழுத்து முறைகள்

- காகிதத்தின் ஒரு பக்கம் மட்டும் எழுதுவதற்காகப் பயன்படுத்த வேண்டும்.
- நீல அல்லது கறுப்புப் பேனா மட்டும் பயன்படுத்த வேண்டும்.
- பென்சில் (Pencil) பயன்படுத்தக் கூடாது.
- எழுத்துத் தெளிவாகவும் வாசிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

## காகித வகை

- A4 அளவு, வெள்ளை நிறம்
- கோடு உள்ள அல்லது கோடு இல்லாத இரண்டு வகைத் தாள்களிலும் எழுதலாம்.

## பக்க அமைப்பு

- ஒவ்வொரு பக்கத்திலும்:
  - *மேல் பகுதியில்:*
    - மாணவர் பெயர்
    - தரம்
  - *கீழ் பகுதியில்:*
    - பக்க எண் குறிப்பிடப்பட வேண்டும்.

## வழிமுறைகள்

- ஒவ்வொரு மாணவரும், கொடுக்கப்பட்ட தலைப்புகளில் ஒரு தலைப்பை மட்டும் தேர்வுசெய்ய வேண்டும்.
- கட்டுரை தமிழ் மொழியில் தெளிவாகவும், அறிமுகம், உட்பொருள், முடிவு ஆகிய அமைப்பிலும் இருக்க வேண்டும்.
- வழங்கப்பட்ட தலைப்பிற்குப் பொருத்தமானதாக கட்டுரை அமைய வேண்டும்.
- பிறர் உதவி இன்றி, மாணவர்களது தனி ஆக்கமாக இருக்கவேண்டும்.
- நகலெடுப்பு முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது.
- அழுக்கான / கிழிந்த காகிதம் ஏற்கப்படாது.
- அச்சு (Print) செய்யப்பட்ட கட்டுரைகள் ஏற்கப்படாது.
- முதல் பக்கத்தில் மாணவரது தகவல் இருக்க வேண்டும். (Student Details Sheet: Full Name, Grade, School Name, School Address)
- அனைத்துப் பக்கங்களும் ஒழுங்காகக் கோர்க்கப்பட வேண்டும்.

## அனுப்பும் முறை

- மாணவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகள் அனைத்தும் விடயத்திற்குப் பொறுப்பான ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, ஆசிரியர் குழாம் மூலம் கட்டுரைகள் பரிசீலிக்கப்பட்டு, அவற்றுள் சிறந்த கட்டுரை ஒன்றினைத் தெரிவுசெய்து, பாடசாலை அதிபர் ஊடாகக் கோட்டக் கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும்.
- இறுதி திகதி: **2026.05.25** அன்று, அல்லது அதற்கு முன்னதாக கோட்டக் கல்விப் பணிப்பாளருக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்க வேண்டும்.
- **2026.06.10** ஆம் திகதிக்கு முன்னர் கோட்டக்கல்விப்பணிப்பாளர் அவற்றுள் சிறந்த கட்டுரை மூன்றை, நிபுணர்த்துவ அணியினரைக்கொண்டு தெரிவுசெய்து, வலயக்கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும்
- **2026.06.17** ஆம் திகதிக்கு முன்னர் வலயக்கல்விப் பணிப்பாளர், அக்கட்டுரைகளில் மூன்றினை நிபுணர்த்துவ அணியினரைக்கொண்டு தெரிவுசெய்து, திருக்குறள் மாநாட்டுச் செயலாளருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.
- இறுதியாக மாநாட்டு நிபுணர்த்துவ அணியினரால் கட்டுரைகள் பரிசோதிக்கப்பட்டு, முதல் மூன்று இடங்களைப்பெற்ற கட்டுரைகளுக்கு விருதும் சான்றிதழும் வழங்கப்படும்.
- ஏனைய மாணவர்களுக்குப் பங்குபற்றியமைக்கான சான்றிதழ் வழங்கப்படும்.


**மாநாட்டுத் தலைவர்**
பேராசிரியர் வ. கனகசிங்கம்

**மாநாட்டுச் செயலாளர்**
கலாநிதி மு. தயாநிதி

**திட்ட ஒருங்கிணைப்பாளர்**
பேராசிரியர் ந. இராஜேஸ்வரன்

**தொடர்புகள்**
அகண்ட தமிழ் உலகம்
இல 33, சரவணா வீதி,
கல்லடி, மட்டக்களப்பு

+94 70 6080 207
akthuthiru@gmail.com
திருக்குறள் மாநாடு
www.akthuthiru.lk